REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

இந்தியாவுக்கு உலக பாங்கி அளித்துள்ள கடன்

வாஷிங்டன், செப். 23—

ஜுன் 30-ந்தேதி முடிய உலக பாங்கி இந்தியாவுக்கு மொத்தம் 3,54,00,000 டாலர் கடன் உதவி தந்துள்ளது.

பாங்கி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரையில் இந்தியாவுக்கு மொத்தம் 23,38,44,313 டாலர் தொகை அளிக்கப்பட்டுள்ளது என்று பாங்கியின் அறிக்கையில் வெளியாகியுள்ளது.

மலர் 5] சென்னை: புரட்டாசி 7உ திங்கள் (23—9—57) ★ ★ வெளியூர்: புரட்டாசி 8உ செவ்வாய் (24—9—57) [இதழ் 86

'நமது நாட்டினை நாமே ஆளவேண்டும்'

'வடவர் பிடியிலிருந்து தாயகத்தை மீட்க விரைவீர்'

'மாற்றாரும் நம் பக்கம் திரும்ப பெரும்பணி ஆற்றுவோம் வாரீர்'

'தேர்தலுக்குப்பின் கழகம் பெற்றுள்ள வளர்ச்சியைக் காணீர்'

வடாற்காடு மாவட்ட தி. மு. கழக மூன்றாவது மாநாட்டில் அன்பில் தருமலிங்கம் முழக்கம்

திருவண்ணாமலை, செப். 23—

திருவண்ணாமலையில் நேற்று கூடிய வடாற்காடு மாவட்ட தி. மு. கழக மூன்றாவது மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய தோழர் அன்பில்-தருமலிங்கம் அவர்கள், 'இந்த வாய்ப்பு எனக்குத் தனிப்பட்ட முறையில் தரப்பட்ட வாய்ப்பு என நான் கருதவில்லை; தி. மு. கழகம் அதன் தொண்டர்களுக்கு அளிக்கும் பெருமை எனக் கருதுகிறேன்; கழகம் வளரக் கஷ்ட நஷ்டங்கள் அனுபவித்தவர்களுக்கும், உயிரையும் தியாகம் செய்தவர்களுக்கும் என் வீரவணக்கத்தைச் செலுத்திக்கொள்ளுகிறேன்; இந்த வாய்ப்பை அளித்த வரவேற்புக் குழுவினருக்கு என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று குறிப்பிட்டுவிட்டு, தலைமை உரையைத் துவங்கிய அவர், 'நல்ல திட்டங்களைத் தீட்டித் தர நமது அண்ணா அவர்களும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் இங்கே இருக்கின்றனர்; நிறைவேற்றப்படும் தீர்மானங்களைச் செயல்படுத்த நாம் காத்திருக்கிறோம் என்பதை அவர்களுக்கு உறுதிகூறி, கூடியுள்ள அனைவரும் தாயகத்தின் விடுதலைக்காக எல்லாவிதத் தியாகங்களையும் மேற்கொள்ளத் தயாராக இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்' என்று கேட்டுக் கொண்டார்; அவரது தலைமை உரையின் முழு விவரமாவது:—

"அரசாங்கப் பதவிகளில் சரிசம பங்கு தேவை எனக் கேட்ட நாம், ஆளுகின்ற பொறுப்பு நமதாக வேண்டுமெனக் கோருகின்ற நிலையை அடைந்துள்ளோம். இதற்கு இடையிலே ஏற்பட்ட திருப்பங்கள் பலப்பல. பணக்காரர்கள் கையிலே இருந்த இயக்கத்தைப் பாட்டாளிகளின் கைக்கு மாற்றி, நாம் யார்? நம் இனம் என்ன? என்ற கேள்விக்கு விடையாக, திராவிடர் கழகம் என்ற பெயரை அளித்து, படித்தவர்களும் பாராட்டத்தக்கமுறையிலே கழகத்தை அமைத்த பெருமை நமது அறிஞர் அண்ணா அவர்களைத்தான் சாரும் என்றால் அது மிகையாகாது. சமுதாயத்தை முதலாவதாகவும், பொருளாதாரத்தையும், அரசியலையும் இரண்டாவதாகவும் வைத்துப் பணியாற்றிவந்த நாம், இடையிலே இந்த திருவண்ணாமலையில் நடந்த உபதேசத்தால் ஏற்பட்ட புயலால் முன்னேற்றக் கழகமானோம். பெயரிலே மட்டும் முன்னேற்றமாக இல்லாமல், சமுதாயத்தையும், அரசியலையும் சம நிலையில் வைத்துப் பணியாற்றி, நாட்டிலே ஓர் விழிப்புணர்ச்சியையும், விடுதலை வேட்கையையும், உண்டாக்கி அறிஞர் அண்ணாவின் தலைமையில் திறம்பட பணியாற்றி செயலிலும் முன்னேற்றமடைந்துள்ளோம். நமது பணியும், கொள்கையும் நாட்டு மக்கள் உள்ளத்தை நமது பக்கம் திருப்பியது.

திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாடு கழக வரலாற்றிலே ஒரு முக்கியமான திருப்பத்தை உண்டாக்கியது. கழகம் தேர்தலில் கலந்துகொள்ள வேண்டுமென்ற நல்ல தீர்ப்பை நாட்டு மக்கள் அளித்தார்கள். நாமும் கடந்த பொதுத் தேர்தலில் கலந்து கொண்டோம். அதன் விளைவுகளைப் பரிசீலிக்கவும், இனி நமது வேலைமுறை என்ன?—என்பதை வகுப்பதற்கும் இன்று முதன் முறையாக இங்கு கூடியுள்ளோம்.

"தேர்தல் வேலை முறை நமக்குப் புது அனுபவம் மாத்திரமல்லாமல், தேர்தல் வேலைக்குத் தேவைப்படுகிற பணம், வாகன வசதிகள் பிரசாரம் இவைகள் ஆளுகின்ற கட்சியாகிய காங்கிரசுக்கு இருந்ததில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட நமக்கில்லை. ஆலை அரசர்கள், தொழில்துறை சீமான்கள், நிலப் பிரபுக்கள் ஆகியோரின் பணமும், அதிகார வர்க்கத்தின் துணையும், ஆளுகின்ற கட்சிக்கு அமோகமாக இருந்தது. ஆனாலும் நாம் மக்கள் சக்தியை மட்டும் நம்பி தேர்தல் களத்தில் இறங்கினோம். சட்டமன்றத் தேர்தலுக்கு 122 இடங்களில் போட்டியிட்டு 17 இலட்சம் வாக்குகளைப் பெற்று 15 இடங்களில் வெற்றி பெற்று, 47 இடங்களில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பிருந்தும், சில டல வசதிக் குறைவின் காரணமாக வெற்றி வாய்ப்பை இழந்து, காங்கிரசுக்கு அடுத்தபடியாக ஓட்டுகளைப் பெற்றிருக்கிறோம். எல்லாம் வல்ல காங்கிரஸ் 201 இடங்களில் போட்டியிட்டு 51 இலட்சம் வாக்குகளைப் பெற்று 150 இடங்களைப் பெற்றுள்ளது. நாம் போட்டியிட்ட 122 இடங்களிலே மட்டும் காங்கிரஸ் பெற்ற வாக்குகள் 31 இலட்சம். நம்மைவிட சுமார் 2 பங்கு வாக்குகள் பெற்ற காங்கிரஸ் நம்மைவிட சுமார் 10 பங்கு இடங்களை அதிகமாகப் பெற்றிருக்கிறது. கட்சிக்குக் கிடைக்கின்ற வாக்குகளின் கணக்கில் இடங்கள் ஒதுக்கப்படவேண்டுமானால், நமது கட்சிக்கு 50 இடங்கள் கொடுக்கப்படவேண்டும். ஆனால் இந்தியாவின் அரசியல் ஜனநாயகம் அப்படியல்லவே! என் செய்வது!

"கிடைத்த வெற்றிகள் 15 தான் என்றாலும், சென்னை சட்டமன்றத்தில் அண்ணா அவர்கள் தலைமையில் இயக்க முன்னணி வீரர்களான சட்டமன்ற உறுப்பினர்கள் நமது இலட்சியங்களை எடுத்து முழங்குவதையும் அந்த முழக்கம், இந்தியத் துணைக்கண்டம் பூராவும் எதிரொலிப்பதையும் காண்கிறோம்.

"சட்டசபையில் 'பட்ஜெட்' விவாதத்தின்போது அண்ணா அவர்கள் ஆற்றிய உரையும், மற்ற உறுப்பினர்களின் ஆணித்தரமானப் பேச்சும், மாற்றுக் கட்சியிலே உள்ளவர்களையும் நம் பக்கம் சேர்க்கின்ற அளவுக்கு இருந்தது என்றால் அது மிகையாகாது வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது என்ற நமது வாதம் வீணல்ல என்று ஒப்புக்கொள்ளப் படுகிறது. திராவிடத்தைக் காப்பதற்கு ஆச்சாரியார் ஆயத்தமாகிறார். வரட்டுக் குரலில் திட்டிவந்த பத்திரிகைகள் வரவேற்கின்றன.

"கனகவிஜயன் தலையில் கல்லேற்றிய சேரன்—செங்குட்டுவன் போல், நமது சொல்லின் செல்வர் சம்பத்தும், தர்மலிங்கமும் டெல்லி பாராளுமன்றத்தில் நமது கொள்கைகளைப் பரப்புகிறார்கள். 'இந்தியா பல மொழிகளைக் கொண்ட ஒரு நாடு அல்ல. பல இனங்களைக் கொண்ட கண்டம்' என்று சம்பத் எழுப்பிய முதல் முழக்கம், அகில இந்திய தேசியவாதிகளை அலறவைத்திருக்கிறது. எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் சட்டசபை நுழைவால் நமது லட்சியத்திற்கு உரமும் வலிவும் அதிகரித்துள்ளது. இருந்ததை இழந்த கம்யூனிஸ்டுகள் ஏக்கம் கலந்த குரலில் நம்மைத் தாக்குகின்றார்கள். "ஏன் போனார்கள் தெரியுமா? பதவிவேட்டை, ரூ.150 சம்பளம் பெறவேண்டும்" என திராவிட கழகத் தோழர்கள் ஏசுகின்றார்கள். 'வரட்டுமே, யார் வேண்டாமென்றார்கள்' என்று கூறி,

(4-ம் பக்கம் பார்க்க)

திருவண்ணாமலை மாநாடு பெற்ற மகத்தான வெற்றி

பல்லாயிரம் மக்களின் எழுச்சி

'இந்தித் திணிப்பை முறியடிப்போம்'

'தாயகத்தை அடிமை நிலையிலிருந்து மீட்போம்'

இரு நாட்களிலும் முன்னணி வீரர்கள் முழக்கம்

திருவண்ணாமலை, செப். 22—

வடாற்காடு மாவட்ட இந்தி எதிர்ப்பு மாநாடு, நேற்று சீரும் சிறப்புமுற நடைபெற்று முடிவுற்றது.

சுவாமி அருணகிரிநாதர் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்து—இந்தித் திணிப்பை எதிர்க்க மாநாடு எடுக்கவிருக்கும் முடிவு என்ன என்று அறிய பேரார்வம் கொண்டவர்களாய்—மாநாடு நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்தவண்ணமிருந்தனர்.

பல்வேறு வெளிமாவட்டங்களிலிருந்தும் ஏராளமானவர்கள் வந்து இம்மாநாட்டில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. நம் கழகத் தோழர்கள் மட்டுமின்றி, பல்வேறு கருத்துக்கொண்ட மக்களும், வரவிருக்கும் இந்தித் திணிப்புப் பேராபத்தை உணர்ந்தவர்களாய் மாநாட்டுக்கு வந்திருந்து, தங்கள் தாய் மொழிப்பற்றையும், இந்தி எதிர்ப்பில் தாங்கள் கொண்டுள்ள அக்கறையையும் காட்டிக் கொண்டனர்.

பரந்த வெளியில் அழகுற அமைக்கப்பட்டிருந்த சாமி அரங்கில் இம்மாநாடு நடைபெற்றது.

மாநாட்டுப் பந்தலுக்குப்போகும் சாலையின் முகப்பில் கோட்டைவாயில் போல அமைக்கப்பட்டிருந்த வரவேற்பு வளைவும், அதைத் தொடர்ந்து சுமார் ஒரு மைல் தொலைவுக்கு வழியின் இருமருங்கிலும் பத்தடிக்கு ஒரு வாழை மரமும், கூந்தல் தோரணங்களும், நல்வரவு கூறும் திரைச்சீலைகளும் கட்டப்பட்டிருந்த காட்சி அனைவரையும் கவர்ந்தது.

பந்தலுக்குள் நுழைந்ததும், அங்கு விண்ணளாவப் பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருந்த நம் கழகக் கொடி அனைவரையும் 'வருக, வருக'வென வரவேற்பதுபோலிருந்தது.

நேற்று காலை 8-30 மணிக்கு காந்தி சிலையிலிருந்து மாநாட்டுத் தலைவர்கள் ஊர்வலம் புறப்பட்டு, மாநாட்டுப் பந்தலை வந்தடைந்ததும் முறையே வரவேற்புரை, திறப்புரை, தலைவரை முன்மொழிதல்—வழிமொழிதல் எல்லாம் நடைபெற்றபின், பகல் 12 மணியளவில் சுவாமி அருணகிரிநாதர் மாநாட்டுக்குத் தலைமையேற்று, தம் உரையை நிகழ்த்தினார் என்ற செய்தி முன்பே வெளிவந்துள்ளது.

தலைவர் உரையுடன் மாநாட்டின் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

மாநாடு துவக்கத்திலும், இடைவேளையிலும், உளுந்தூர்பேட்டை தோழர் கே. டி. நித்தியானந்தம் இன்னிசை வழங்கி அனைவரையும் மகிழ்வித்தார்.

பிறகு, பிற்பகல் 3½ மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் துவங்குவதற்கு முன் மாநாட்டு மேடையிலேயே தோழர் இராசாங்கம்—தோழியர் சந்திரா திருமணம் மாநாட்டுத் தலைவர் அருணகிரிநாதர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பிறகு தோழர்கள் கா. அப்பாதுரை, டி. வி. நாராயணசாமி, தில்லை-வில்லாளன், க. அன்பழகன் எம். எ., சி. பி. சிற்றரசு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இறுதியாக, அண்ணா அவர்கள் பேசினார்கள்.

அண்ணா அவர்கள் தம் சொற்பொழிவுக்குப்பின் இந்தி எதிர்ப்பு சம்பந்தமான தீர்மானங்களைப் படித்து, கரவொலிகளுக்கிடையே நிறைவேற்றிவைத்தார்.

பிறகு வரவேற்புக் குழுச் செயலாளர் தோழர் ப. உ. சண்முகம் நன்றிகூற மாநாடு இரவு 7-30 மணியளவில் முடிவுற்றது.

இரவு 10 மணிக்கு புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினரின் 'இன்பக்கனவு' நாடகம் நடைபெற்றது.

★

இரண்டாவது நாள் நிகழ்ச்சிகள்

திருவண்ணாமலை, செப். 23—

வ. ஆ. மாவட்ட தி. மு. கழக 3-வது மாநாடு நேற்று காலை 9-30 மணியளவில் நாகூர் அனீபா குழுவினரின் இன்னிசையுடன் வழங்கியது.

இன்னிசைக்குப்பின் வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் முல்லைசத்தி அனைவரையும் வரவேற்றார்.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 23—9—57 திங்கள்

கவலை கொண்டதுண்டா?

'சுண்டைக்காய் கால் பணம் சுமைக்கூலி முக்கால் பணம்' என்பார்கள். அதற்கொப்பத்தான், இந்தியப்பேரரசால் மேற்கொள்ளப்படும் பணிகளும், நிறைவேற்ற கைக்கொள்ளும் முறைகளும் அமைந்து கிடக்கின்றன.

சிக்கனமாகச் செலவிட வேண்டும்—வீண் செலவைக் கைவிடவேண்டும் -- வயிற்றைச் சுருக்க வேண்டும்—வாட்டத்தைத் தாங்கிக்கொள்ள வேண்டும் என்றெல்லாம், உறக்கத்திலும் அறிவுரை கூறுவதில் சிறந்து விளங்கிவரும் இந்தியப் பிரதமர், குடிமக்களுக்கு ஒவ்வொரு நாளும் போதித்து வருகிறார். மூச்சுவிடத் தவறினும் அவர் தவறக்கூடும்—இத்தகைய அறிவுரைகளை ஊர் மக்களுக்கு அளிப்பதில் அவர் ஒரு விநாடியும் தவறுவது கிடையாது.

ஊர் மக்களுக்கு உபதேசித்து வரும் உயர் கருத்துக்களில் அதி முக்கியமான இரண்டொன்றையாவது, தமது ஆட்சித் துறைகளில் செயலாற்ற வேண்டுமே, அதுவல்லவோ சிறந்த முறையாகும் என்று இந்தியப் பிரதமர் கண்ணிமைக்கும் கால அளவாவது நினைத்துப் பார்ப்பவராகக் காணோம். அவருடைய ஆட்சியைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டுள்ள இந்தக் குறைபாட்டினை மறைக்கத்தானோ என்னவோ, எதற்கெடுத்தாலும் பொழிப்புரை, விருத்தியுரை, கருத்துரை, தெளிவுரை என்ற முறையில் விளக்கம் தந்துகொண்டு, இந்தியப் பிரதமர் காலங் கழித்துக்கொண்டுவருகிறார்.

அவருடைய போக்கால் விளைந்த — விளைகின்ற—விளையக்கூடிய சீரழிவு தனித்த முறையில் அவரை மட்டுமே தாக்கித் தொல்லை தரக்கூடியதாக இருந்தால், அதுபற்றிக் கவலைப்பட வேண்டிய கட்டாயம் மற்றவர்களுக்கு இருக்கத் தேவை இல்லை. அவர் தவறு செய்கிறார், அதன் விளைவுகளை அவர் மட்டுமே தாங்கிக்கொள்ளப் போகிறார், அதற்காக நாம் கவலைப்படுவானேன் என்று நாம் அனைவரும் இருந்துவிடலாம். அவர் செய்கின்ற பெருந்தவறு கூட, அவரை நெருங்குவதும் இல்லை—தீண்டுவதற்கும் அஞ்சுகிறது. ஆனால், அவரால் ஏற்படுகின்ற சிறு தவறும்கூட, பரந்த இந்தியத் துணைக் கண்டத்தையும், இங்குள்ள பல கோடி மக்களையும் பாதிப்பதாக இருக்கிறது. எனவேதான், அவர் செய்கின்ற தவறு சிறிதாக இருந்தாலும் பெரிதாக இருந்தாலும், அத்தவறை அவர் தெரிந்து செய்வதாக இருந்தாலும் தெரியாமல் செய்வதாக இருந்தாலும், அதுபற்றி மற்றவர்கள் கவலைகொள்ளவும், அதுபற்றிக் கண்டித்துக் கூறவும் முன்வருகின்றனர்.

சிறிய பொறுப்பில் இருக்கின்றவர்கள் செய்கின்ற தவறே பலருக்கு தீராத் தொல்லையாக முடிகிறது என்றால், பண்டித நேருவைப் போன்ற பெரிய பொறுப்பில் இருப்பவர்கள் செய்கின்ற சிறு பிழையும், நாட்டு மக்கள் அனைவரையும் அல்லவா சீரழித்துவிடும்? அறியாது செய்த பிழை எனப் பின்னர் கண்டறியப்பட்டாலும், பிழையின் விளைவை அதனால் தடுக்கமுடியாதே!

மிகக் குறைந்த செலவில் மண்ணால் கட்டி முடிக்கக்கூடிய அணைப் பகுதியை, பெருந்தொகை பிடிக்கும் சிமெண்டு காங்கிரீட்டால் நிர்மாணிக்க வேண்டும் எனத் திட்டம் திட்டப்படுகிறது. அப்பெருஞ் செலவை மக்களால் தாங்கிக் கொள்ள முடியுமா முடியாதா என முதற்கண் தெளிவாகத் தெரிந்துகொள்ளப்பட வேண்டியதை, மக்கள் கூக்குரல் கிளம்பும்பொழுது தெரிந்து கொள்ள அவசரம் அவசரமாக முயற்சிக்கப்படுகிறது. அக்காலந் தாழ்த்திய முயற்சிக்காகச் செலவழிக்கப்படுவதில் சிக்கனம் இருப்பதில்லை. எனவே, இம் முயற்சியில் செலவிடப்படும் பெருந்தொகையும், திட்டத்தின் பெருந்தொகைசெலவுடன் கூடி, இவ்வளவையும் தாங்கிக் கொள்ளவேண்டிய மக்களின் இடுப்பை மேலும் முறிக்கும் நிலையில் இறுதியாக வந்து முடிவுறுகிறது.

"வெள்ளையர் ஆட்சிக் காலத்தில், சுமார் 35,000 மைல் நீள இரயில் பாதை அமைக்க ரூ. 666 கோடிதான் செலவிடப்பட்டது; ஆனால் கடந்த பத்து ஆண்டுக்கால காங்கிரஸ் ஆட்சியில், சுமார் 600 மைல் நீள இரயில் பாதை அமைக்க ரூ. 268 கோடி செலவாகியுள்ளது. இந்த நிலை, ஒவ்வொரு மைல் நீள இரயில் பாதை அமைக்கும் செலவு 20மடங்கு அதிகரித்திருக்கிறது என்பதைக் காட்டும்; ஆனால் அதே நேரத்தில் பொருள்களின் விலை நான்கு மடங்கிற்குமேல் ஏறியிருக்கிறது.

"வெள்ளையராட்சிக் காலத்தில், ஒரு ஏகர் நிலப்பரப்பிற்கு நீர்ப்பாசன வசதி செய்ய ரூ. 45 செலவிடப்பட்டது; ஆனால், காங்கிரசு ஆட்சியில், சுமார் ரூ. 600 செலவிடப்படுகிறது.

"ஐந்தாண்டுத் திட்டங்களும் அப்படியேதான். திட்டத்தை கவனமாகப் பரிசீலித்தால், திட்டம் உருவான அடிப்படையே தவறானது என்பதுடன் ஒழுங்கீனங்களும், திறமைக் குறைவும் மிகுந்த ஒரு நிர்வாகத்தினால், திட்டத்தை சரிவர நிறைவேற்ற முடியாது என்பதையும் தெரிந்துகொள்ள முடியும்."

இந்த விளக்கத்தை சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் லோகியா தந்துள்ளார்.

இவ்வாறு மிகைபடச் செலவழிக்கப்பட்டுள்ள பெருந்தொகை எங்கு போயிற்று? எவர் எவர் அதைக்கொண்டு வாழ்வும் வளமும் பெற்றுள்ளனர்? இதுபற்றி பண்டிதர் கவலை கொண்டதுண்டா?

'சுண்டைக்காய் கால் பணம் சுமைக்கூலி முக்கால் பணம்' என்று சொல்லத்தக்க நிலையில் பண்டிதர் ஆட்சி இருக்கிறதா இல்லையா என்பதைப் பொது மக்கள்தான் முடிவு கட்டிக் கொள்ள வேண்டும்

'வெறி கொண்ட வடவர் நிதானம் பெறுகின்றனர்'

'இந்தித் திணிப்பு: சிந்தனைக்குரிய பிரச்சினையாகிவிட்டது'

'எதிர்க்க நம்மால் ஆகுமா என்ற தமிழர் கேள்வி வெட்கந்தருவதாகும்'

ஈ. வெ. கி. சம்பத் பேட்டி விவரம்

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் நமது நிருபருக்குத் தந்த பேட்டியின் நேற்றையத் தொடர்ச்சி கீழே தரப்படுகிறது :—

கே:—"தாங்கள் பேசும்போது இடையிடையே குறுக்கிட்டார்களாமே; அவர்கள் என்ன கூறினார்கள்?"

ப:—"நான், 'இந்தியா ஒரு பல மொழி அரசுமட்டுமல்ல; பல நாடுகளைக் கொண்ட ஒரு அரசு' என்று குறிப்பிட்டபோது 'இல்லை, இல்லை' என்று சிலரும், 'அவர் வரைகடந்து பேசுகிறார்' என்று சிலரும் கூச்சலிட்டனர்."

கே:—"இப்படிக் கூச்சலிட்டதற்குக் காரணம் தங்களை மேலும் பேசவிடாமல் செய்துவிடவேண்டும் என்பதுதானா?"

ப:—"அதுமட்டுமல்ல; தாங்கள் இதுகாறும் 'இந்தியா ஒரே தேசம்' என்று உலகெங்கும் சென்று புளுகிவைத்திருப்பதை, 'இங்கு வந்து ஒருவன் அம்பலப் படுத்துகிறானே; இந்தியா ஒரே நாடல்ல—பல நாடுகளைக் கொண்ட ஒரு அரசு என்று பேசுகிறானே' என்பதினால் ஏற்பட்ட ஆத்திரம் காரணமாகவும்தான் அப்படிக் கூச்சல் எழுப்பினர்."

கே:—"இந்தி ஏகாதிபத்தியத்தை தமிழ் நாடு ஒரு நாளும் ஏற்காது என்ற தங்களது எச்சரிக்கை வட நாட்டு இந்தி வெறியர்களின் மனப்போக்கில் ஏதேனும் மாற்றத்தை உண்டுபண்ணியிருக்கிறதா? அவர்களின் வெறியைத் தணிப்பதில் தங்கள் உரை எவ்வளவுதூரம் பயன்பெற்றிருக்கிறது?"

ப:—'நான் பேசியதைத் தொடர்ந்து பேசிய பலரும் இந்தித் திணிப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்; சுற்றிலுமிருந்து இந்திக்கு எதிர்ப்புக் கிளம்புவது கண்டு, இந்தி வெறியர்களின் தலைவர்கள் சற்று நிதானம் பெற்று வருகின்றனர். தீவிரமான இந்தித் திணிப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு அச்சப்படத்தான் செய்கின்றனர். விளைவுகளைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.'

கே:—"தங்களைப் பாராட்டிய பலரும், இந்தித் திணிப்பு பற்றி என்ன கருதுகின்றனர்?"

ப:—"உ. பி., பீகார் பிரதிநிதிகளைத் தவிர பொதுவாகப் பல மாநிலத்தவரும்—குறிப்பாக வங்கம், அசாம், ஆந்திரம், மராட்டியம், பஞ்சாப் இந்த மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் சிலரும், 'இந்தி தேவையே இல்லை; ஆங்கிலமே இருக்கலாம்' என்று கருத்தறிவித்தனர்.

"வங்கத்தைச் சேர்ந்த ஹிரேன் முகர்ஜி என்ற கம்யூனிஸ்டு எம். பி, வெளிப்படையாகவே, 'இந்தி தேவை இல்லை; ஆங்கிலம் இருக்கலாம்' என்று கருத்தறிவித்திருப்பதாகத் தெரிகிறது. கம்யூனிஸ்டுகளிடத்திலும் இந்த இந்தி விஷயத்தில் இருவிதக் கருத்துக்கள் இருக்கத்தான் செய்கின்றன.

"ஆந்திர காங்கிரஸ் எம். பி. ஒருவர், 'இந்தி தேவையே இல்லை' என்பதை, என்னைப் பாராட்டும்போது கூறினர்.

"இந்தி ஆதிக்கம் என்பது, ஆழ்ந்த சிந்தனைக்குரிய—உயிரோட்டமுள்ள ஒரு பெரும் அரசியல் பிரச்சினை என்பதை, எனது உரைக்குப் பின்னர் பலரும் சிந்திக்கத் தலைப்பட்டிருக்கின்றனர்.

"டெல்லி மாநிலத்திலேயே கூட, 'இந்தி மொழியா, உருது மொழியா' என்ற சண்டை இருக்கத்தான் செய்கிறது. மராட்டியம், வங்கம், பஞ்சாப், ஆந்திரம் ஆகிய இந்த மாநிலங்களைச் சேர்ந்தவர்களில் குறிப்பிடத்தகுந்தவர்கள், இந்தி ஆதிக்கத்திற்கு எதிரான கருத்துடையவர்களாகவே இருக்கின்றனர்."

கே:—"நமது தமிழ் நாட்டவர் இந்தி எதிர்ப்புப் பற்றி என்ன கருதுகின்றனர்?"

ப:—"இந்தி எதிர்க்கப்பட வேண்டியதுதான்; ஆனால் அது நம்மால் முடியுமா?—என்று கேட்கின்றனர். இதுதான் எனக்கு மிக வெட்கத்தையும், வேதனையையும் தருவதாக இருந்தது."

கே:—"சரி; பொதுவாக நம்மைப் பற்றி அங்கு நிலவும் கருத்தைச் சொல்லுங்கள்."

ப:—"இதுவரை நாம யார் என்பது அந்த வட்டாரத்தவருக்குத் தெரியாது—தெரிவிக்கப்படவில்லை. இப்போது தெரிந்து கொள்வதில் ஆவல் காட்டுகிறவர்கள் உண்டாகியிருக்கிறார்கள். சிலர் திராவிடர் கழகத்தையும், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் ஒன்று என்று கருதிக்கொண்டிருந்தார்கள்; இணைத்தும் பேசிவந்தனர். இப்போது, 'அது வேறு—நாம் வேறு' என்பதைத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்று தெளிவாகச் சொல்லக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

"அண்ணா அவர்களது 'ஹோம் லண்ட்' இதழைப் படிக்க பலர் தலைப்பட்டிருப்பதுடன், அதில் வரும் விஷயங்களைப் பற்றி மேலும் விவாதிக்க என்னை அணுகுகின்றனர். நானும் இயன்ற அளவு அவர்களுக்கு நமது கருத்துக்களை எடுத்துக்கூறி வருகிறேன். அவர்களின் எண்ணிக்கை வளருகிறது.

"திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி அண்ணா, மற்றும் நமது பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் வாயிலாக அறிய மிக ஆவல் கொண்டிருக்கிறார்கள்."

மாபெரும் சாதனை!

மனித இருதயத்தை மாற்றி அமைக்கலாம்

சிக்காகோ—

பாதிக்கப்பட்ட இருதயத்தை மாற்றுவது நடைபெறக்கூடியதுதான் என்று இரண சிகிச்சை நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒரு நாயின் இருதயத்தை மற்றொரு நாய்க்கு தான் மாற்றியுள்ளதாக சர்வதேச இரண சிகிச்சை நிபுணர்கள் கல்லூரியில் பேசுகையில் அவர் கூறினர். இருதயம் நீக்கப்பட்டு, மற்றொரு நாய்க்கு மாற்றப்பட்டு, அதன் சுயத் துடிப்புத் துவக்கப்பட்டு, இரண்டு மணி நேரத்துக்கு முதல் நாயின் விநியோகம் தொடர்ந்து நடைபெற்றது என அவர் தெரிவித்தார்.

மனித இருதயத்தை மாற்றுவதற்கான முறையில் இது ஒரு மாபெரும் சாதனையாகுமெனக் கூறப்படுகிறது.

இந்தியாவில் நூல் நிலைய இயக்கம்

ஒரு புள்ளி விவரம்

1950 51—ல், இந்தியாவில் மொத்தம் 1,166 நூல் நிலையங்கள் இருந்தன. அவைகளில் 28 நிலையங்கள் பல்கலைக்கழக நூல் நிலையங்களைச் சேர்ந்தவை: 774 நிலையங்கள் பள்ளிக்கூடங்களையும், கல்லூரிகளையும் சேர்ந்தவை 243 நிலையங்கள் பொது நிலையங்கள்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 148 மாவட்ட நூல் நிலையங்களும், 9 மாநில நூல் நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டன.

1961-ம் ஆண்டிற்குள் 320 மாவட்டங்களில் நூல் நிலையங்களை ஏற்படுத்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மத்திய நூல் நிலையம் இருக்கும்; அது சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களிலுள்ள தேசிய நூல் நிலையங்களுடனும், டில்லியில் நிறுவப்பட இருக்கும் தேசிய நூல் நிலையத்துடனும் இணைக்கப்பட்டிருக்கும்.

எச்சரிக்கை விளக்குகள்

கதிரியக்க வாயு மூலம் இயங்கச் செய்ய ஏற்பாடு

நியூயார்க்—

கதிரியக்க வாயு மூலம் இயங்கும் விளக்குகளை உருவாக்குவதற்கு இப்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது; மீண்டும் எரிபொருளோ, அல்லது மின்சாரச் சக்தியோ பெறாமல் எச்சரிக்கை மீண்டும் ஏற்பாடாக இவைகளை அமைத்துக் கொள்ள இந்தப் பரிசீலனைகள் நடைபெறுகின்றன.

எச்சரிக்கை இடத்தில் இந்த விளக்கு பொருத்தப்பட்டால் அது சுயமாகவே இயங்குகிறது; இந்த விளக்குகள் 10 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் இயங்குமென தொழில் நுட்ப அறிஞர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

இந்த விளக்குகளிலிருந்து வீசும் வெளிச்சம் 500 கெசத் தூரத்திற்கு தெளிவாகத் தெரியுமெனக்கூறப்படுகிறது.

தென்னகத்தின் பொருளாதாரம் பிற்போக்கு நிலையிலிருப்பானேன்?

அதிகாரப் பீடத்தில் வடவரே பெரும் அளவில் குவிந்திருப்பதுதான் காரணமா?

கும்பகோணம், செப். 21—

"தென்னகம் பொருளாதாரத் துறையில் பிற்போக்காக இருக்கிறதென்பதில் கருத்து வேற்றுமை இருப்பதற்கில்லை. இந்தியப் பேரரசின் அமைச்சரவையிலும், மற்றும் எல்லா அதிகாரப் பீடங்களிலும் வடவரே பெரும் அளவுக்குப் பிரதிநிதித்துவம் பெற்றிருப்பது ஒருக்கால் இந்நிலைக்குக் காரணமாக இருக்கலாம். தென்னகத்தின் பொருளாதாரப் பிற்போக்கு நிலையை இந்தியப் பேரரசினர் உணரத் தக்கவழியில் மக்கள் கிளர்ச்சி இதுகுறித்துத் தேவையானதேயாகும்"

என்று, சோஷலிஸ்டுக் கட்சியின் கொள்கை நிர்ணயக் குழு உறுப்பினர் மகாதேவ சிங், 12-9-57-ல், இங்கு நிருபர்களிடை பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

‘சட்டமியற்றும் முறையிலேயே அடிப்படைக் கோளாறுகள் உள்ளன’

‘மாறுபட்ட கருத்துக்களுக்கு இப்போது மதிப்புத் தரப்படுவதில்லை’

‘சமூக நியாயம் என்ற பெயரால் ஏழைகள் பரம தரித்திரர்களாக்கப்படுகின்றனர்’

‘சட்டம் தரும் பாதுகாப்பை அயோக்கியர்கள் மட்டுந்தான பயன்படுத்திக் கொள்ளுகின்றனர்?’

“கொள்கை வகுத்தலும் திட்டமிடுதலும், அமுல் செய்வதற்கான நடைமுறையும் இசைவாக அமைய வேண்டும். இந்த அம்சங்களை எல்லாம் கவனிக்காமல் அவசரக் கோலத்தை அள்ளித் தெளிக்கும் வகையில் சட்டங்கள் இயற்றப்படும் போக்கு சகஜமாகி விட்டதால்தான், அந்தச் சட்டங்கள் விதிமுறைகள் பற்றி முரணான வியாக்கியானங்கள் எழுந்து தாவாக்கள் ஏராளமாகக் கிளம்புகின்றன. சட்டமியற்றப்படும் முறையிலேயே அடிப்படையான கோளாறு இருக்கிறது. மத்திய ஆட்சி சம்பந்தப்பட்டவரை நிலைமை அவ்வளவு மோசமாக இல்லை. ஆனால், பெரும்பாலான இராஜ்யங்களில் மசோதாக்களை சட்டசபை மெம்பர்கள் சரிவர படித்தேனும் நிறைவேற்றுகிறார்கள் என்ற நிலைமை இல்லை.

“கட்சித் தலைமையின் ஆதிக்கம், பெரும்பாலோரின் கடமையுணர்ச்சியற்ற போக்கு, வலுவான எதிர்க்கட்சிகள் இல்லாத குறை போன்ற காரணங்களால் சட்டமியற்றல், ஊழல் மலிந்ததாக ஆவதுடன், பலவகை அநீதிகள் நடைபெறுவதற்கும் காரணமாகிவிடுகிறது. இந்த நடைமுறை அடியோடு மாறினுலொழிய வியாஜ்ய மூலங்கள் வளரத்தான் செய்யும்.

“சனநாயகம் என்பது விவாதத்தின்மூலம் நடைபெறும் ஆட்சிமுறை என்பதை ஆளும் கட்சியினர் பல சந்தர்ப்பங்களில் புரிந்துகொள்வதில்லை. பொது மேடைகளிலும், பத்திரிகைகளிலும் பொறுப்புணர்ச்சியுடன் தெரிவிக்கப்படும் மாறுபட்ட கருத்துக்களுக்கும் வெறும் யோசனைகளுக்கும் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் தரப்பட்ட மதிப்புக்கூட இப்பொழுது தரப்படுவதில்லை.

“சரிவர ஆராய்ந்து பதில் சொல்லத் திறமை இல்லாமல் இல்லை; சொல்வதற்கு அவர்களிடம் நியாயமில்லை எனபதும் ஜவாப் சொல்லிக்கொண்டு சிரமப்படாமல், சட்டசபையிலுள்ள —சொன்னபடி கேட்கும் வோட்டுப் பலத்தைக்கொண்டு எதையும் சாதித்துக்கொள்ளலாம் என்ற தைரியமும்தான் இத்தகைய போக்கிற்கு முக்கிய காரணம். சமூக நியாயம் என்ற பெயரைச் சொல்லி தாம் செய்வதெல்லாம் சரி என்று அவர்கள் கூறிவருகிறார்கள்.

“சமூக நியாயம் என்பது அவசியமான—காலப்போக்கை அனுசரித்த நீதிமுறை என்பதை ஆட்சேபிப்பதற்கில்லை. ஆனால், ஏழைகளையும் சிறிய உடைமையாளரையும் பரமதரித்திரர்களாக்கும் சட்டங்கள்கூட சமூக நியாயத்தின் பெயரால் இயற்றப்படுவதைக் காண்கிறோம். இப்பேர்ப்பட்டவர்களுக்குக்கூட விலக்கு அளிக்காத சட்டம் எப்படி சமூக நியாயத்தை ஏற்படுத்துவதாக இருக்க முடியும்? இந்தச் சூழ்நிலையில் சட்டத்தையே ஆட்சேபிக்கும் மனப்பான்மை வலுக்கத்தான் செய்யும்.

“நீதிபதிகள் சமூக நியாய உணர்ச்சியுடன்கூட கவனிப்பதால் மட்டும் தாமதம் தீர்ந்துவிடாது. சட்டமியற்றுவதிலும், விதிமுறைகளை நிர்ணயிப்பதிலும் அதிகக் கவனம் செலுத்துவதன் மூலமாக மட்டுமே தாமதத்தை மிதப்படுத்தலாம்.

“சமூக நியாயத்தைப் பூராவாக நடத்திவைக்கப் போதிய வசதியற்ற நிலைமையில், அநாவசியமாக மக்களின் ஆசையை வளர்த்து, அவற்றைப் பூர்த்தி செய்ய முடியாது போனபின், பகையுள்ளவர்கள் மீதும், கோர்ட்டுகள் மீதும் மட்டும் பழி போடப் பார்ப்பது நல்ல மனோபாவமாகாது.

“சட்டம் தரும் பாதுகாப்பின் சந்துபொந்துக்களை அயோக்கியர்கள் தமக்கு அனுகூலமாகப் பயன்படுத்தப் பார்ப்பது உண்மையே; அதனால் தாமதமேற்படுவதும் வாஸ்தவமே; ஆனால், அவர்கள் மட்டும்தான் இவ்வாறு தவறு இழைக்கிறார்கள் என்பதில்லை. மிக அற்பமான ஆட்சேபணைகளைக் கிளப்பி, பல தேர்தல் தாவாக்களின் விசாரணைகளைப் பெரிய காங்கிரஸ் பிரமுகர்களே தாமதப் படுத்தப் பார்ப்பது நேருஜி அறியாதது அல்ல!

“சட்டம் கொடுக்கும் இடத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் முயற்சி சகஜமானது. நெல்லுக்கிறைக்கும் நீர் புல்லுக்கும் பொசியத்தான் செய்யும். களையாகிய புல்லை அகற்றுவதுபோல யோக்கியதை இல்லாதவர்களைப் பொது வாழ்க்கையிலிருந்து களைவது தான் பரிகாரம். அவர்கள் சில சமயம் பயனடைகிறார்களே என்பதற்காக சாமான்ய மக்களின் உரிமைகளுக்குள்ள பாதுகாப்பை வில்லங்கப்படுத்தலாகாது.”

—‘நீதியின் தாமதம்’ என்ற தலைப்பில், 20—9—57 ‘தினமணி’ இதழ் வரைந்துள்ள தலையங்கத்தின் சில பகுதிகள் தான் மேலே காணப்படுபவையாகும்.

போலீஸ் அதிகாரிமீது குற்றச்சாட்டு?

ரூ. 30,000 மதிப்புக்கு 350 டன் சிமெண்டு வாங்கப்பட்டது

விசாரணையில் கவனிக்கப்பட்டதா?

‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ இதழில் வெளியிடப்பட்டுள்ள ஒரு கடிதத்தின் சாரம் இங்கு தரப்பட்டிருக்கிறது:—

அதிசயிக்கத்தக்க மௌனம்

ஐயா,

‘சதி யோசனை’ என்ற தலைப்பில் தங்களின் 14—9—57 இதழில் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றித் தீட்டியுள்ள தலையங்கத்தின் சம்பந்தமாக ஒரு சில உண்மைகளை வாசகர்களின் கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகிறேன்.

3—4—56-ல், 250 டன் சிமெண்டுக்கும், 8—6—56-ல், 100 டன் சிமெண்டுக்கும் இராசரத்தினம் மனைவியாருக்கு ‘அனுமதி’ தரப்பட்டுள்ளது.

இந்த ‘அனுமதி’யின் பேரில் 350 டன் சிமெண்டு 1956 எப்ரல் முதல் ஜூன் வரையில் அவர்களுக்குத் தரப்பட்டுள்ளது.

கட்டிடம் கட்டுவதற்காக வாங்கப்பட்ட சிமெண்டின் மொத்த அளவே இதுதான் என்று வைத்துக்கொண்டாலும், விசாரணை நடத்திய நீதிபதி திரு. பி. என். இராமசாமிக்கு யோசனை கூறிய தலைமை பொறியியலாளருக்கு, ரூ. 30,000 செலவிடப்பட்டு சிமெண்டு வாங்கப்பட்டுள்ளது என்பது தெரிந்திருந்ததா என்று பொதுமக்கள் அறிய வேண்டும்.

கட்டிடச் செலவின் மொத்தத்தில், 7 சதவிகிதம் மட்டுமே சாதாரணமாக சிமெண்டின் மதிப்பாக இருக்கும் என்பது கட்டிடம் கட்டுவோரும், கட்டிட நிர்மாணர்களும் கொண்டுள்ள நியாய விதி கருத்தாகும். இந்த அடிப்படையில் ரூ. 30,000 மதிப்புள்ள சிமெண்டு செலவிடப்பட்ட கட்டிடங்களின் மதிப்பைக் கணக்கிட்டுப் பார்த்தால் ரூ. 4,25,000 ஆகும் என்பது புலப்படுகிறது. இந்தத் தொகை, விசாரணையில் மதிப்பிடப்பட்டுள்ள 1,38,716—12—0-க்கு மூன்று மடங்கு அதிகமான தாகும்.

இந்த அதிசய விஷயம் பற்றி, மௌனத்தை விட்டு, எப்போது அரசாங்கம் ஆக்கச் செயலில் ஈடுபடும் என்று பொதுமக்கள் வியப்புடன் எதிர்பார்க்கின்றனர்.

விஷயமறிந்த ஒருவன்
சென்னை—6

[இந்தப் பிரச்சினைபற்றி பல கடிதங்கள் எமக்குக் கிடைத்துள்ளது; ஆனால், அவைகளில் புதிய உண்மைகள் ஏதும் இல்லாத காரணத்தால் வெளியிடவில்லை. இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகளை ஆராய்ந்து, உண்மை என்று அறிந்த பின்னரே வெளியிட்டுள்ளோம்.]

—ஆசிரியர்: ‘இ. எ.’

சட்டபூர்வமான விசாரணை நடத்துக!

சென்னை, செப். 21—

போலீஸ் ஐ. ஜி. மீது கூறப்பட்ட புகார்கள் பற்றி நீதிபதி பி. என். இராமசாமி நடத்திய விசாரணை பற்றி தமிழ் நாடு சோஷலிஸ்டுக் கட்சி கருத்து தெரிவித்துள்ளது.

“நடைபெற்ற விசாரணை சட்டபூர்வமானதென்றோ, இலாகா மூலம் நடத்தப்பட்டது என்றோ ஏற்கமுடியாது”

என்று, சோஷலிஸ்டுக் கட்சியின் தமிழ் நாட்டுப் பகுதி செயலாளர் தெரிவிததுள்ளார்.

நியாயமான—சட்டபூர்வமான விசாரணை நடத்த வேண்டுமென்று வற்புறுத்தியும் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

பன்மொழிப் புலவர் பொன் விழாக் குழு

பன்மொழிப் புலவர் பொன் விழாக் குழுவில் உறுப்பினராகப் பணியாற்ற மேலும் பின்கண்டவர்கள் ஒப்புதல் தெரிவித்துள்ளார்கள்:—

12 திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.
13. „ சி. இலக்குவனார் அவர்கள், இந்துக் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர், நாகர்கோயில்.
14. டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், தியாகராசர் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர், மதுரை.
15. „ ஆ. கார்மேகக்கோன் அவர்கள், மதுரை.
16. திரு. கா. அப்துல்கபூர் அவர்கள், ஹாஜி கருத்தராவுத்தர் ஹவ்தியா கல்லூரி முதல்வர், உத்தமபாளையம்.
17. „ தி. தனகோடி அவர்கள், காதிர் மோகைதீன் கல்லூரி முதல்வர், அதிராம்பட்டினம்.
18. „ எஸ். டி. சிவநாயகம் அவர்கள், ‘சுதந்திரன்’ ஆசிரியர், [கொழும்பு.
19. „ ஆ. நடராசன் அவர்கள், கொழும்பு.
20. „ கதி. இராமநாதன் அவர்கள், கொழும்பு.
21. „ வி. வி. இராமசாமி எம்.எல்.சி. அவர்கள், விருதுநகர்.
22. „ மு. அள. மெ. கரு. சேதுராமன், கொழும்பு.

கலைவாணர் மறைவுக்கு நகரசபைகள் வருத்தம்

சேலம் நகராண்மைக் கழக அவசரக் கூட்டம் தலைவர் பி. மதுரைப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் மறைவு குறித்துத் தலைவர் கொண்டுவந்த அனுதாபத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. எல்லோரும் அமைதியாக எழுந்து நின்று தீர்மானத்தை நிறைவேற்றினர்.

* * *

கொடைக்கானல், செப். 19—

கொடைக்கானல் நகரசபைக் கூட்டம் 13—9—57 மாலை 4-30 மணிக்கு நகரசபை மண்டபத்தில் தலைவர் கே. பி. காதர்பிச்சை ராவுத்தர் தலைமையில் துவங்கியது; உறுப்பினர் எஸ். முருகையா கொண்டுவந்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் மறைவுக்கு வருந்தும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. 2 நிமிடம் மௌனமாக எல்லோரும் எழுந்து நின்றனர்.

பின்னர் நகரசபை உறுப்பினரும் நகர தி. மு. கழகச் செயலாளருமான கே. எம். எம். மேத்தா, உயர்நிலைப் பள்ளியில் கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் உருவப் படத்தைத் திறந்துவைக்க வேண்டும் எனும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். விவாதத்திற்குப்பின் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

நகரசபைத் தலைவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் உருவப் படத்தை கே. எம். எம். மேத்தா வாங்கிக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டார்.

★

குடந்தையில் கலைவாணர் படிப்பகத் திறப்பு விழா

குடந்தை உப்புக்காரத் தெருவில் 15-9-57 இரவு 7 மணிக்கு, தோழர் கி. மனோகரன் அவர்களால் கலைவாணர் படிப்பகம் திறந்துவைக்கப்பட்டது.

துவக்கத்தில் தோழர் மனோகரன் அவர்களால் கொடியேற்றுவிக்கப்பட்டது.

மணவழகர் மன்றத்தில் கலைவாணர் படத் திறப்பு விழா

14—9—57 மாலை 6-30 மணி அளவில் சென்னை — பெத்து நாய்க்கன்பேட்டை மணவழகர் மன்றச் சார்பில் (எண் 2, முருகேசமுதலித் தெரு), கலைவாணர் என்.எஸ்.கே. படத் திறப்பு விழா நகராட்சி மன்றத் தலைவர் திரு. கே. என். சீனிவாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திரு. சீனிவாசன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:—

“மறைந்த கலைவாணர் நம் எல்லோருக்கும் சொந்தமாகிவிட்டார். அவர் திரை உலகில் புகுந்த பிறகுதான் படங்களில் சமூகச் சீர்திருத்தங்கள் பல புகுத்தப்பட்டன. அவருடைய இழப்பு உண்மையிலேயே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.”

தோழர் கண்ணதாசன் அவர்கள் கலைவாணர் படத்தைத் திறந்து வைத்து சுமார் ஒருமணி நேரம் கலைவாணரது சிறப்பியல்புகளையும், அவரது கொடைத் திறனையும் ஈரநெஞ்சத்தின் மாண்பையும் விளக்கி, இவ்வட்டாரத்தில்வீராங்கனை டாக்டர் எஸ். தருமாம்பாள் அவர்களால் கட்டிக் காத்துவரும் இம்மன்றம் செய்துவரும் அரிய தொண்டுகளைப் பாராட்டிப் பேசினார்.

சேலம் நகர வாக்காளர் பட்டியல்

கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்

“1957-ம் வருடம் திருத்தப்பட்ட வாக்காளர்களின் பட்டியல் சேலம் நகரில் 25-9-57-ல் வெளியிடப்படுமென்றும், வாக்காளர் பட்டியலில் திருத்தங்களோ, நீக்குதல்களோ, புதிதாக பெயர்கள் சேர்க்கப்படுவதற்கான விண்ணப்பங்களோ 16—10—57-ந் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டுமென்று சேலம் மாவட்டக் கலெக்டர் தெரிவித்துள்ளார்.

“எனவே, சேலம் நகரிலுள்ள தி. மு. கழகக் கிளைகளும், தோழர்களும், அந்தந்த வட்டாரங்களில் உள்ள திருத்தங்களையும், புதிய விண்ணப்பங்களையும் கடைசி தேதிக்கு முன்னதாகவே அனுப்பச் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

“நகர வாக்காளர் பட்டியல் சேலம் தாலுகா அலுவலகத்திலும், நகரசபை அலுவலகத்திலும் பார்வைக்கு வைக்கப்படுகிறது”

என்று, 28, 29-வது வட்டக் கிளைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

****

தலைமைக் கழகம்—அறிக்கை எண்: 9/57

கே. வி. கே. சாமி நினைவு நாள்

திராவிட முன்னேற்றக் கழக முன்னணி வீரரும், செயற்குழு உறுப்பினரும், நெல்லை மாவட்டச் செயலாளரும், தொழிலாளர்த் தலைவருமாகிய தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து 20—9—57 அன்று ஓராண்டு நிறைவு பெறுகிறது. எனவே, நாடெங்கிலுமுள்ள தி. மு. கழகக் கிளைகள் அவரது நினைவு நாளாக 29—9—57 ஞாயிறு அன்று கொண்டாடுமாறு வேண்டிக்கேட்டுக்கொள்கிறோம்.

19—9—57
‘அறிவகம்’
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர் தி. மு. க.

****

'இயற்கையாகவே இந்தியா இரண்டுபட்டதுதான்'

'இந்தியைத் திணிப்பதால் 'ஒற்றுமை'க்கு ஆபத்து நேரிடும்'

ஆங்கிலத்தையும் இந்திய மொழியாக ஏற்கவேண்டும்'

தென்னிந்திய ஆய்வு மன்றத் துவக்கவிழாவில் டாக்டர் சுப்பராயன் கருத்துரை

சென்னை, செப். 23—

"இயற்கையாகவே இந்தியா, வடநாடு—தென்னாடு என இரண்டு பட்டதாகும்; ஆனாலும், இந்தியா பிளவுபட்டுக் கிடந்ததால்தான் அன்னியருக்கு அடிமைப்பட நேர்ந்தது"

என்று, டாக்டர் சுப்பராயன் எம்.பி. அவர்கள், கருத்தறிவித்துள்ளார்.

கடந்த 20-ந் தேதியன்று மாலை கோகலே மண்டபத்தில் தென்னிந்திய ஆய்வு மன்றத்தினைத் துவக்கி வைத்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மன்றத் தலைவரான ஏ. சுப்பையா அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றுப் பேசுகையில் மன்றத்தின் நோக்கங்களை விளக்கினார்.

தென்னாட்டிற்குச் சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் மக்களின் கருத்தறிவதும், புள்ளிவிவரங்கள் சேகரிப்பதும் மன்றத்தின் முக்கிய நோக்கங்கள் என்றார், அவர்.

தென்னாட்டுக் கலைகளின் சிறப்பை வெளிப்படுத்தும்வண்ணம் நல்ல கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதும், மன்றம் செய்த ஆராய்ச்சி முடிவுகளைப் புத்தகங்களாக வெளியிடுவதும் மன்றத்தின் நடைமுறைகளாகும் என்பதை அவர் விளக்கினார்.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் மேலும் பேசியதாவது:—

"இந்தியை இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆக்குவதை அரசியல் சட்டத்தில் ஒரு ஷரத்தாக ஏற்றுக்கொண்டபோது, நாட்டில் நிலவிய நிலைமை முற்றிலும் வேறுபட்டதாகும். அன்று புதிதாகப் பெற்ற சுதந்திரத்தால் மக்கள் அனைவரும் உணர்ச்சிவயப்பட்டிருந்த நேரம். இன்று இந்தித் திணிப்பை வன்மையாக எதிர்க்கும் ஆச்சாரியார்கூட அன்று இந்தியை ஆதரித்தார்.

"ஆனால் நானும், திரு. இராமலிங்கச் செட்டியாரும் அரசியல் நிர்ணய சபையிலேயே இந்தியை அவசர அவசரமாகத் திணிப்பதை எதிர்த்தோம்; '25 ஆண்டுகளாவது அவகாசம் வேண்டும்' என்று நாங்கள் கேட்டோம் ஆனால் 15 ஆண்டுகள் மட்டுமே இடைக்கால அவகாசம் பெற முடிந்தது.

"அன்றே நாங்கள் ஆங்கிலத்தையும் இந்திய மொழிகளுள் ஒன்றாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென அரசியல் நிர்ணய சபையில் வாதாடினோம். 'இந்தியாவில் ஆங்கிலோ-இந்தியர் கணிசமான அளவு வாழ்கின்றனர்; அவர்களுக்குத் தாய்மொழி ஆங்கிலம்தான்; எனவே, ஆங்கிலத்தையும் இந்திய மொழிகளுள் ஒன்றாக ஆக்க வேண்டும்' எனக் கூறினோம். ஆங்கிலத்தையும் இந்தியையும் ஒன்றோடொன்று சமமானதாக இயக்க வழி செய்ய வேண்டுமெனக் கேட்டோம். ஆனால், எங்கள் கோரிக்கை ஏற்கப்படவில்லை. இப்படி நான் சொன்னபோது அவனாசிலிங்கம் செட்டியார் போன்றவர்கள் என்னை, 'பழைமையாளர்—ஆங்கிலேய வாழ்க்கைமுறையில் ஊறிப்போன பழைமையாளர்' எனக் கேலி செய்தனர். ஆனால் இது குறித்து நான் பெருமைப்படுகிறேன்.

"ஆங்கிலம்தான் இன்று இந்தியாவின் ஒற்றுமைக்குக் காரணமாயிருந்தது—இருக்கிறது. ஆங்கிலத்தை அகற்றிவிட்டால் இந்தியாவில் 'ஒற்றுமை'க்கு 'சலாம்' போட்டு வழியனுப்பிவிட வேண்டியதுதான்.

"காந்தியார் ஒரு முறை எனக்கு இந்தியில் கடிதம் எழுதியிருந்தார். நான் அவருக்குப் பதில் எழுதும்போது, 'நான் உங்களுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டிருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லைபோலும்' என்று எழுதினேன்; உடனே அவர், தமது செயலுக்கு வருந்துவதாகவும் இனி ஆங்கிலத்திலேயே எழுதுவதாகவும் எனக்குக் கடிதம் எழுதினார். இதுதான், இந்தி பற்றிய காந்தியாரின் கருத்து.

"இன்று இந்திக்கு, தென்னாட்டிலும், கிழக்கே வங்காளத்திலும் பெரும் எதிர்ப்பு இருக்கிறது. எனவேதான், இந்திக் குழுவின் அறிக்கைக்கு நான் எழுதிய கருத்து வேறுபாட்டில் காணப்படும் முடிவுகளும், டாக்டர் சட்டர்ஜியின் முடிவுகளும் ஒரே வகையானவையாயிருக்கின்றன!

பின்னர், 'சுயராஜ்யா' இதழ் ஆசிரியர் காசா சுப்பாராவ், தியாகராயா கல்லூரி பேராசிரியர் சண்முகசுந்தரம் ஆகியோர் பேசினர்.

மன்றச் செயலாளர்களுள் ஒருவரான தோழர் வி. பி. இராமன் நன்றி நவில விழா இனிது முடிவுற்றது.

அன்பில் - தருமலிங்கம் முழக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

'வரவிடாதீர்கள்' என்று மக்களைக் கெஞ்சி 'வந்து விட்டார்களே, என் செய்வது' என்று கைபிசையும் காங்கிரஸ்காரர்கள் தூற்றுகின்றார்கள். போற்றுதலையும்; தூற்றுதலையும் ஒன்றாகக் கருதி நமது பணியை நாம் தொடர்ந்து செய்து வருகிறோம்.

"சட்ட சபையில் அண்ணா அவர்களின் பட்ஜெட் விவாதத்திற்குப் பதிலளிக்கிற முறையில் பேசிய நிதியமைச்சர் கனம் சுப்ரமணியம் அவர்கள், தன்னையும் மறந்து, 10 ஆண்டுகளுக்கு திராவிட நாடு பிரிவினையை ஒத்திப்போடுங்கள் என்று ஒப்பந்தம் பேசிவிட்டு, வடநாட்டுப் பத்திரிகைகளால் தாக்கப்பட்டவுடன், பச்சோந்தியாகி, நாசவேலையை நிறுத்திவைக்கச் சொன்னேனே தவிர, நாட்டுப் பிரிவினையையல்ல என்று பேசியது அனைவருக்கும் தெரியும். ஆனாலும் நாட்டு மக்கள், அவர் நம் இலட்சியத்தை அணுகுகின்றார் என்பதை உணரத் தலைப்பட்டார்கள். அதை மக்கள் மனதிலிருந்து மறைப்பதற்கு, இப்பொழுது தி. மு. கழகத்துக்கு புள்ளிவிவரம் தெரியவில்லை என்று போகிற இடமெல்லாம் கூறிவருகிறார். நம்மைப் பார்த்து புள்ளிவிவரம் தெரியாதவர்கள் என்று கூறும் நிதி மந்திரியார், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 400 கோடி பெறுவதிலிருந்து, தேவிகுளம்-பீர்மேடு பெறுவதுவரை, இவரது புள்ளி விவர நிபுணத்துவம் டில்லியில் எவ்வளவு ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை நாட்டு மக்கள் உணர்ந்துதான் வருகிறார்கள் என்பதை நிதி மந்திரி அறியமாட்டார்.

"சட்டமன்ற நுழைவுக்குப் பிறகு, நாள்தோறும் நடைபெறும் நிகழ்ச்சிகள் நம்முடைய இலட்சியமான நாட்டுப் பிரிவினைக்கு அரண் செய்வதாக இருக்கிறது. தேர்தல் இவர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்கும் என்ற முதலமைச்சரின் கூற்றுக்குப் பதிலளிப்பதுபோல் தேர்தலுக்குப் பிறகு நாடு பூராவும் பட்டிதொட்டிகளிலெல்லாம் புதுப்புதுக் கிளைகள் உதயமாகிக்கொண்டே வருகின்றன. நம் பேச்சை அலட்சியம் செய்து வந்தவர்கள் எல்லாம், நம் பக்கம் அணுகுவதைப் பார்க்கிறோம். பலர் அங்கத்தினராகி உறுப்பினர்களின் எண்ணிக்கை லட்சக்கணக்கில் பெருகி வருவதையும் காண்கிறோம். இந்த வளர்ச்சியை நாம் நல்ல முறையிலே பயன்படுத்தி, செயல்படுத்த வேண்டும்.

"இந்திய துணைக் கண்டத்தின் அரசியலை ஏகபோகமாக அனுபவித்துவரும் வடநாட்டுக்காங்கிரஸ்காரர்கள், வரலாறு தெரிந்த காரணத்தால், என்றாவது ஒருநாள் தென்னாடு பிரிந்தே தீரும் என்ற உண்மையைப் புரிந்துகொண்டு, ஏகபாரதப் பேச்சால் இங்குள்ள காங்கிரசாரை இளிச்சவாயர்களாக்கி, மொத்த வருமானத்தின் பெரும்பகுதியைத் தங்கள் நாட்டின் விவசாயத்தையும், தொழில் வளத்தையும் பெருக்கவே செலவிட்டு வடவரின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்துவருகின்றனர். அதை நாம் எடுத்துச்சொல்லும்போது இங்குள்ள காங்கிரஸ் நண்பர்களும் மற்ற அகில இந்தியக் கட்சியினரும் நம்மீது வெறுப்பைக் காட்டினாலும் உள்ளூர உணருகிறார்கள். ஆனால் அதை இந்திய சர்க்காரிடம் எடுத்துரைக்கும் திறமையும் தைரியமும் இன்னும் அவர்களுக்கு வரவில்லை,

"எல்லைப் பிரச்சினையிலிருந்து நினைவுச சின்னங்கள் ஏற்படுத்துவதுவரையில் எல்லாப் பிரச்சினைகளிலும் மற்ற மாகாணத்திலுள்ள காங்கிரஸ்காரர்கள் போராடிப் பெறுகிற அளவுக்கு இவர்களால் வாதாடக்கூட முடியவில்லை.

"அப்படிச சில சமயங்களில் அந்தத் தைரியம் பிறந்தாலும் 'நாடு எக்கேடு கெட்டால் நமக்கு என்ன? நம்முடைய பதவியைக் காப்பாற்றிக்கொண்டால் போதும்' என்ற சுயநலம் அவர்களைத் தடுத்து நிறுத்திவிடுகிறது.

"நாட்டின் முன்னேற்றத்துக்குப் பாடுபடுவதற்குப் பதிலாக, தங்களைத் தாங்கள் காப்பாற்றிக் கொள்வதற்கும், தங்கள் கையிலிருந்து பதவி நழுவாமல் இருப்பதற்குமான காரியங்களில் ஈடுபடுகின்றார்கள். புதுத் தொழில்கள் ஆரம்பிப்பதற்கு வேண்டிய அனுமதிகள் திறமையுள்ளவர்களுக்குத் தரப்படுவதற்குப் பதிலாக, திறை செலுத்துவோருக்கு அளிக்கப்படுவதும், நிறைவேற்றப்படும் திட்டங்களினால் நாட்டுக்கு எவ்வளவு நன்மை என்று பார்ப்பதைவிட, நிறைவேறும் திட்டத்தினால் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் கட்சிககும், கட்சியைச் சார்ந்தவர்களுக்கும், எவ்வளவு நன்மை கிடைக்கும் என்ற கணக்கைப் போட்டுக் காலம்தள்ளி வருகின்றார்கள்.

"அதோடு, இந்தியை வலுக்கட்டாயமாகப் புகுத்தமாட்டோம் என்று கூறிக்கொண்டே, தமிழர்களை தலைநிமிர்ந்து வாழவொட்டாமல் செய்யத் திட்டம் வகுத்து அவசர அவசரமாக இந்தியை ஆட்சிமொழியாக்கி, ஆதிக்கம் செலுத்த அரும்பாடுபட்டுவரும் வடநாட்டு இந்தி வெறியர்களின் போக்கை எடுத்துக்கூறி, அந்த இந்தியை இந்நாட்டு அரசியலிலிருந்து விரட்டும் பெரும் பணியில் நாம் உடனடியாக ஈடுபட்டாக வேண்டும்.

பொதுவாக, வடநாட்டார் தென்னாட்டுக்கு இழைத்துவரும் தீங்குகளையும், அதனால் நம் நாட்டில் ஏற்படும் அவலநிலையையும், அந்த அவலநிலையை போக்க, வடவர் பிடியிலிருந்து திராவிடத்தை மீட்டு, நம் நாட்டை நம் மக்களே ஆளவேண்டுமென்ற நமது இலட்சியமான "திராவிடநாடு திராவிடருக்கே!"—என்ற நாட்டுப் பிரிவினைத் திட்டத்தை நிறைவேற்றவும், அதற்கு நாட்டு மக்களையும், நல்ல மனம்படைத்த காங்கிரஸ் நண்பர்களையும், மாற்றுக் கட்சித் தோழர்களையும் நம் பக்கம் இழுக்கவேண்டிய பெரும் பணியை நாம் செய்தாகவேண்டும்.

பாரத் பைன் ஆர்ட்ஸ், சென்னை-1.

இன்று மாலை 6-30 மணிக்கு

ராஜா அண்ணாமலை மன்றத்தில்

அறிஞர் அண்ணா M.A., M.L.A.

அவர்கள் தலைமையில்

சிவாஜி - கணேசன் நடிக்கும்

வீரபாண்டிய கட்டபொம்மன்

—நாடகம்

திருவண்ணாமலை..

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தோழர் வே. கிருஷ்ணமூர்த்தி எம். ஏ. மாநாட்டைத் துவக்கி வைத்து உரை நிகழ்த்தினர்.

அடுத்த, தோழர் அன்பில்-தர்மலிங்கம் அவர்களை மாநாட்டுக்குத் தலைமைதாங்கி நடத்திக்கொடுக்குமாறு தோழர் முல்லை-சத்தி கேட்டுக் கொண்டார்.

அவரைத்தொடர்ந்து, தோழர் எம். பி. சாரதி எம். எல். ஏ; சந்தானம் எம். எல். ஏ; ஆரணி கண்ணையன்; பொன்மலை-பராங்குசம், திருப்பத்தூர்-நெடுஞ்சோழன், தோழியர் பொற்செல்வி-இளமுருகு, தோழர்கள் கே. கே. நீலமேகம் மு. கருணாநிதி ஆகியோர் வழிமொழிந்து பேசினர்.

பின்னர், தோழர் அன்பில்-தர்மலிங்கம் தலைமையேற்று உரை நிகழ்த்தினர். தலைவர் உரைக்குப் பின்னர் கேரள மாநில தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. எச். எம். சுபேர் மலையாள மொழியிலும், தோழர் பி. எம். நருணாகரன் தெலுங்கிலும், பெங்களூர் தோழர் ஏ. வி. பதி கன்னட மொழியிலும் நம் கழக இலட்சியங்களை விளக்கிப் பேசினர்.

பின்னர் தோழர்கள் ஏ.கோவிந்தசாமி எம். எல். ஏ; எம். செல்வராஜ் எம். எல். ஏ; ஆசைத்தம்பி எம். எல். ஏ; சந்தானம் எம். எல். ஏ; எஸ். எஸ். இராசேந்திரன் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின் மாநாடு இடைவேளைக்காகக் கலைந்தது.

பிற்பகல் நிகழ்ச்சி

பிற்பகல் 3-30 மணியளவில் தோழர் நாகூர்-அனிபா குழுவினரின் இன்னிசையுடன் மாநாட்டு நிகழ்ச்சிகள் துவங்கின.

முதலில் துணைப் பொதுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் கழகக் கொள்கைகளையும், இன்றைய அரசியல் நிலைமைகளையும் விளக்கிப் பேசினர்.

பின்னர் தீர்மானங்களை முன்மொழிந்தும், வழிமொழிந்தும் தோழர்கள் மதுரை-எஸ். முத்து, கள்ளக்குறிச்சி - நடராசன் எம்.எல் ஏ., என். எஸ். இளங்கோ, கி. மனோகரன், கே. கே. நீலமேகம், புதுவை வழக்கறிஞர் பெருமாள், சேலம் - ஈ. ஆர். கிருஷ்ணன், சத்தியவாணி-முத்து எம்.எல்.ஏ., ஆனந்தன்எம்.எல்.ஏ., இரத்தின-பாலகுருசாமி, சலைகண்டபுரம்-ப. கண்ணன், காஞ்சி-மணிமொழியார், முத்துக்கருப்பன், இரா. செழியன், சி. பி. சிற்றரசு, அரங்கண்ணல், க. அன்பழகன் எம்.எல்.ஏ., வழக்கறிஞர் வி. பி. இராமன், டி. கே. பொன்னுவேலு, சிற்றுளி-சுப்பிரமணியம், எம். எஸ். மணி, வேலூர் தேசியமணி, குடியாத்தம்-சம்பந்தம், சாரங்கபாணி, பொன்-சொக்கலிங்கம், வி. என். இராமசாமி, பொற்செல்வி-இளமுருகு, தெள்ளூர் தருமராசன் ஆகியோர் பேசினர்.

பின்னர், தோழர்கள் எம். ஜி. இராமச்சந்திரன், மு. கருணாநிதி, ஈ. வெ. கி. சம்பத். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் பேசிய பின், அண்ணா அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினர்கள்.

தீர்மானங்கள் யாவும் பலத்த கரவொலிகளுக்கிடையே நிறைவேறின. இறுதியாக, நன்றி கூறலுடன் மாநாட்டு நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

இரவு 10 மணிக்கு, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினரின் 'அட்வகேட் அமரன்' நாடகம் நடைபெற்றது.

★

தீர்மான ஆய்வுக்குழு

பிற்பகல் 2-30 மணிக்கு மாநாட்டுக் கொட்டகையில் வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் முல்லை-சத்தி தலைமையில் தீர்மான ஆய்வுக்குழுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் கலந்துகொண்டார்.

மாநாட்டுப் பிரதிநிதிகள் தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்து விவாதித்த பின்னர், மாநாட்டில் நிறைவேற்றப்படுவதற்கான தீர்மானங்கள் உருவாக்கப்பட்டன.

மாநாட்டு வரவேற்புக்குழுச் செயலாளருள் ஒருவரான தோழர் ப. உ. சண்முகம் குழுவினருக்கு நன்றி கூறினர்.

கழகக் கூட்டம்

★

சந்திரசேகரபுரம்:
தி. மு. கழகத் துவக்கவிழா
25—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: ப. நாராயணசாமி
பேசுவோர்:
போ. தருமன்
பி. கே. இ. அப்துல்லா
என். சாமிநாதன்
நாதசுர இன்னிசை: உடையாளூர் ந. இசையமுது குழுவினர்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.